**செய்தி வெளியீடு எண்: 135** **நாள்: 22.02.2018**

## செய்தி வெளியீடு

அறிவியல் நகரம் தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அமைப்பாகும். அறிவியல் நகரத்தின் முக்கிய குறிக்கோள் மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். இதன் அடிப்படையில் அறிவியல் நகரம் தமிழகத்திலேயே முதன் முறையாக "சென்னை அறிவியல் விழா" என்ற உன்னதமான நிகழ்ச்சியை 2008 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. இந்த விழாவின் முக்கிய குறிக்கோள் மாணவர்களுக்கிடையே அறிவியல் விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்கள் அன்றாட வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளில் உள்ள அறிவியல் பின்னனியை – உண்மையை எடுத்துக் கூறி அறிவியல் ஆர்வத்தை ஏற்படுத்துவதாகும்.

பதினோறாவது ஆண்டாக இந்த வருடமும் சென்னை அறிவியல் விழா 2018 பிப்ரவரி திங்கள் 21 ஆம் தேதி முதல் பிப்ரவரி திங்கள் 24 ஆம் தேதி வரை அறிவியல் நகர வளாகத்தில் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற பொருளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இவ்வரிய அறிவியல் விழாவினை 21.02.2018 அன்று முனைவர் இரா. பழனிசாமி, இ.ஆ.ப., ஆணையர், தொழில்நுட்ப கல்வி இயக்ககம், சென்னை அவர்கள் விழாவை துவக்கி வைத்து சிறார் அறிவியல் அகாடமி விருதுகளை வழங்கி உரையாற்றினார்.

விழாவின் மூன்றாம் நாளான 23.02.2018 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் அறிவியல் நகர அரங்கத்தில் திரு. கே.பி. அன்பழகன், மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள அறிவியலாளர்களுக்கு ''தமிழ்நாடு இளம் அறிவியலாளர் விருது 2016'', ''தமிழ்நாடு முதுநிலை அறிவியலாளர் விருது 2016'' மற்றும் ''தமிழ்நாடு வாழ்நாள் அறிவியல் சாதனையாளர் விருது 2016'' விருதுகளை வழங்கி உரையாற்றுவார்கள். திரு. சுனில் பாலிவால், இ.ஆ.ப., முதன்மைச் செயலர், உயர் கல்வித்துறை விழாவில் தலைமையுரை ஆற்ற உள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**